செ.வெ.எண்: 38 / ஜூன் நாள்: 17.06.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**தொழில்முனைவோர் விழிப்புணர்வு முகாம்**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

சிறந்த தொழில் முனைவோர்களை கண்டறிய சென்னையிலுள்ள தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனமும், தொழில் வணிகத்துறையின் மாவட்ட தொழில் மையமும் இணைந்து வரும் ஜூன் 28-ஆம் தேதி மாவட்ட தொழில் மையம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம், இராமநாதபுரம் என்ற முகவரியிலும், ஜூன் 30-ஆம் தேதி ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்ட அரங்கம், பரமக்குடி என்ற முகவரியிலும், ஜூலை 13-ஆம் தேதி முகம்மது சதக் பாலிடெக்னிக் கல்லூரி, கீழக்கரை என்ற முகவரியிலும் காலை 10 மணி முதல் ஒரு நாள் தொழில்முனைவோர் விழிப்புணர்வு முகாம் நடத்தப்படவுள்ளன.

சுயமாக தொழில் தொடங்க விரும்பும் 18 வயதுக்கு மேற்பட்ட தொழில் துறையில் அனுபவமிக்க மற்றும் ஏதேனும் தொழிலில் அடிப்படை பயிற்சி பெற்ற ஆண்கள் மற்றும் பெண்கள் அனைவரும் இந்த முகாமில் கலந்து கொள்ளலாம்.

முதல் கட்டமாக சொந்தமாக தொழில் தொடங்குவதில் உள்ள நன்மைகள், தொழில் வாய்ப்புகள், தொழிலை தேர்வு செய்வது எப்படி? தொழில் தொடங்கும் முனைவோருக்கு அரசு மற்றும் பிற நிறுவனங்கள் வழங்கும் உதவிகள் மற்றும் திட்டங்கள் ஆகியன பற்றி இம்முகாமில் விவரிக்கப்படும். பயிற்சி முகாமின் இறுதியில் தொழில் தொடங்க விரும்பும் நபர்களின் பெயர்கள் பெறப்பட்டு அவர்கள் இரண்டாம் கட்ட பயிற்சிக்கு அழைக்கப்படுவர்.

5 நாட்கள் நடைபெறும் இரண்டாம் கட்ட பயிற்சியில் இந்த தொழில்முனைவோர்களுக்கு தொழில் வணிக வடிவம் மற்றும் திட்ட அறிக்கை தயாரித்தல் பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவர்களுக்கு நிதி உதவிகள் பெற ஆலோசனைகள் வழங்கப்படும்.

தகுதி உள்ளவர்கள் அரசு வழங்கும் மானிய திட்டங்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டு, அதன்மூலம் நிதி உதவிகள் பெற ஆலோசனைகள் வழங்கப்படும். இப்பயிற்சியில் தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்துடன் மாவட்ட தொழில் மையமும் இணைந்து செயல்படும்.

மேலும் விவரங்களுக்கு தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தை 87545 90965 என்ற எண்ணிலும், இராமநாதபுரம் மாவட்ட தொழில் மைய பொது மேலாளரை 04567-230497 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு பயனடையலாம்.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,இராமநாதபுரம்**